
Chubb
www.siobhainmcdonagh.org.uk
020 8542 4835
1A




பிரித்தானியாவின் பாராளுமன்ற தேர்தலில் புலம்பெயர் தமிழர்கள் வாக்குகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய சக்திகளாக உள்ளனர். அந்தவகையில் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழினப்படுகொலைக்கு நீதியும் தமிழீழ கொள்கைக்கு ஆதரவும் வழங்கவேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ் இளையோர் கட்சிகளுக்கான தேர்தல் பிரச்சாரங்களில் கைகோர்த்துள்ளனர்.

இந்நிலையில், பிரித்தானியாவின் தொழிற்கட்சியின்
மிச்சம் மோடன் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் சியோபைன் மெக்டொனால்ட் (Hon. Siobhan McDonagh MP) அவர்களின்
பிரச்சாரப் பணியில் பெருந்திரளான தமிழ் இளையோர் களமிறங்கியுள்ளனர்.

ஸ்ரீலங்காவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை பிரித்தானியாக ஏற்றுக் கொண்டு நீதி வழங்க வேண்டும், யுத்தக் குற்றவாளிகளில் ஒருவரான இராணுவ தளபதி பிரிகேடியர் சவேந்திர சில்வா மீது பிரித்தானியா தடை விதிக்கவேண்டும், தமிமீழ தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையிலேயே தொழில்கட்சிக்கு ஆதரவு வழங்க தமிழர்கள் முன்வந்துள்ளனர்.

பிரித்தானிய தொழிலாளர் கட்சிக்கான தமிழர்கள் (Tamils For Labour)
அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்ற இந்த அரசியல் பணியை, இளம் அரசியல் செயற்பாட்டாளர்களான தனுஷாத் மரியநேசன் ஆகியோர் தலைமையில் டிலான் சசிகரன், ஜெஸ்லின் உதயராணி யோகானந்தம், சிறிஸ்காந்தன் சின்னத்துரை, அல்பேட் பிறிற்றோ அன்ரன் ஐருசான், இரத்தினசிங்கம் வைகுந்தகுமார், வசந்தன்குமார் பாலசரஸ்வதி, குணசிங்கம் ஜிறோசன், சந்திரவர்மன் மேகலக்சன், சந்திரபர்மன்

நிலானி, தங்கவேலு சுதாகரன், துஷாந்தன் செல்வரஞ்சன், அன்ராணி உதயகுமரன் ரொனால்ட், இரத்னசிங்கம் ஜனனன், விதுஷன் கணேசமூர்த்தி, புஸ்பகாந் சிவலிங்கம், முகமது இசத் தல்ஹா ஆகிய செயற்பாட்டாளர்கள் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




---

# ??????????????????? ???? ???? ????????? ???????????? ?????? ????????? ????????? ????????????!







பிரித்தானியாவில் நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு பிரித்தானியாவின் அனைத்து

கட்சிகளும் தமது தேர்தல் பிரச்சாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் பிரித்தானியாவில் வாழும் பெரும் தொகையான ஈழத்தமிழரின் வாக்குகள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தவல்லன. அந்தவகையில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, நிபந்தனை அடிப்படையில் தமது ஆதரவை வழங்குவதன் மூலம் ஈழத்தமிழருக்கு நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதியும், தமிழீழ கொள்கைக்கு ஆதரவும் தேடும் இராஜதந்திர நகர்வை பிரித்தானிய வாழ் ஈழத்தமிழ் இளைஞர்கள் முன்னெடுத்துள்ளனர்.

ஸ்ரீலங்காவில் நடைபெற்றது இனப்படுகொலை என்பதை பிரித்தானியாக ஏற்றுக் கொண்டு நீதி வழங்க வேண்டும், யுத்தக் குற்றவாளிகளில் ஒருவரான இராணுவ தளபதி பிரிகேடீயர் சவேந்திர சில்வா மீது பிரித்தானியா தடை விதிக்கவேண்டும், தமிழீழ தனிநாட்டு கோரிக்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே மேற்படி தமிழ் இளையோர் பழமைவாத கட்சிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

அந்தவகையில், தமிழ் இளைஞர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தர முன்வந்துள்ள பழமைவாத கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் மீண்டும் தெரிவுசெய்வதற்கும், பழமைவாத கட்சியே மீண்டும் அரசாங்கத்தை உருவாக்குவதற்கும் ஆதரவுதேடி தேர்தல் பிரச்சார பணிகளில் தமிழ் இளையோர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பிரித்தானியாவின் கரோ கிழக்கு (Harrow East) தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் பொப் பிளக்மான் (Hon. Bob Blackman CBE MP) அவர்களின் பிரச்சாரப் பணியில் பெருந்திரளான தமிழ் இளையோர் ஈடுபட்டுள்ளனர்.

பிரித்தானிய பழமைவாத கட்சிக்கான தமிழர்கள் (British Tamil Conservatives) அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை (17) இடம்பெற்ற இந்த அரசியல் பணியை, செயற்பாட்டாளர்களான ஆயுட்சன் அருள்தாஸ், சசீஸ்கண்ணா நடராசா ஆகியோர் தலைமையில் அனுஷன் பாலசுப்பிரமணியம், அமல்ராஜ் ஜெயக்குமார், ஏஞ்சலோ நிருஷன் கதிராமர் , தனபால் சுப்ரமணியம், இன்பராஜ் பத்திநாதர், சத்தியதேவன் தேவயான்சன், சிவசிதம்பரம் கோகுலன், பவிலன் ஐயம்பிள்ளை, றூபன் மத்தியாஸ், ரவிச்சந்திரன் சதுசன் ஆகிய செயற்பாட்டாளர்கள் குழுவினர் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


209
CONSERVATIVES
PEOPLE


209
CONSERVATIVES
209a